[1980 ஜூலை 30

திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோவில்.

*வினா எண் 57—திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருப்போரூரில் அருள்மிகு கந்தசாமி கோவில் கட்டிட வேலை பாதியில் நிறுத்தப்பட்டது, அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

(இ) அந்தவேலை எப்போது மறுபடியும் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: (அ) & (ஆ) திருப்போரூரி லுள்ள அருள்மிகு கந்தசாமி ஆலய இராஜகோபுரத் திருப்பணி மற்றும் சுவாமி சந்நிதி விமானம் பழுது பார்த்தல் வேலைகளுக்கு மதிப்பீடு 12—11—1977ல் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், இராஜகோபுரத் திருப்பணி வேலை மட்டும் தொடங்கப்பட்டது. ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும்போது முக்கால் பாகம் வேலை செய்த பிறகு, ஒப்பந்தக்காரர் புதிய விகிதத்தில் கூடுதல் பணம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டதாலும் போதிய நிதி வசதி குறைவாலும் மேற்கண்ட திருப்பணி வேலை கள் முடிக்கப்படாமல் உள்ளன.

(இ) திருப்பணிக்காக அனுமதிக்கப்பட்ட திருப்பணிக் குழுவின் பதவிக்காலம் முடிந்து விட்டபடியால் புதிய திருப்பணிக் குழு அமைத்து, ஒப்பந்தக்காரரின் கோரிக்கை மீது முடிவெடுத்து விரைவில் திருப்பணி வேலைகள் தொடங்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. ஆனால், இந்த திருப்போரூர், அருள்மிகு கந்தசாமி ஆலயம் கிட்டத் தட்ட இரண்டு ஆண்டு காலமாக துவங்கப்பட்ட அந்த வேலை, முடிவடையாமல் இருகிறது. இதற்கு ரிவைஸ்ட் எஸ்டிமேட், கூடுதல் மதிப்பீட்டுத் தொகை அளிக்கப்படுமா? அது மட்டு மல்ல. இராஜகோபுர வேலை நடைபெறாமல் நிறுத்தப்பட்டி ருக்கிறது. அந்த டெண்டர் கால்பார் பண்ணியதில், கூடுதல் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை யும், கூடுதலாகக் கொடுத்து, அந்த வேலை துவக்கப்படுமா? அது மட்டுமல்ல. கோவிலினுடைய கும்பாபிஷேகம் நடை

பெறவில்லை. அதற்கும், உடனடியாக அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அது மட்டுமல்ல. எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி, இந்த வேலைகளைத் துவங்கக் கூடிய பொறியாளர்கள் இந்த இலாகாவிலே கூடுதலாக இல்லாத காரணத்தினால்தான் இந்த வேலைகள் தாமதமாகின்றன என்று சொல்லப்படுகிறது. எனவே, இது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர்.எம்.வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டிலே ஒரு மதிப்பீடும் பிறகு 1977 ஆம் ஆண்டிலே திருத்த மதிப்பீடும் அதற்கு அளிக்கப் பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒப்பந்தம் எடுத்துக்கொண்டு, வேலையைத் துவங்கிய அந்த ஒப்பந்தக்காரர் இடையிலே அதிகத் தொகை கேட்டதாலே தகராறு எழுந்து அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தேவையான பொருளாதாரம் இல்லையென்ற காரணத்தால் வேலை தவக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் விரைவில் அதற்காக அறநிலையத் துறை ஆணைகள் பிறப்பித்து திருப்பணி முடிக்கப்படும். திருப்பணி முடிந்தால் கும்பாபிஷேகம் நடைபெறும்.

திரு. எல். இளையபெருமாள்: திருப்போரூரில் இருந்த நிர்வாக அதிகாரிக்கும் முன்பு இருந்த ஒப்பந்தக்காரர்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக வேலை பாதிக்கப்பட்டதாக அரசுக்குத் தகவல் வந்ததா? பொதுமக்கள் வந்து புகார் கூறி நிர்வாக அதிகாரியை மாற்ற ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: திருப்பணி சம்பந்தப் பட்ட கேள்வியான காரணத்தால் அதன் தகவல்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் புதிய தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆதாரங்களோடு தகவல்களைத் தந்தால் அதைப் பற்றி விரிவாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்பட்டால் சபைக்கும் வேறு கேள்விகள் போட்டால் அந்த தகவல்கள் தரப்படும்.

+2 வகுப்புகள்

*வினா எண் 74—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—